முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.994/2023

வா.சா.1 கிரிராஜ்குமார் த/பெ குப்புசாமி

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை:–</u>

1. பிரதிவாதி ஈரோடு அகில்மேடு வீதியில் உள்ள கார்த்திகாம்பளக்ஸ் என்ற கட்டிடத்தில் வேலாஎலக்ட்ரானிக்ஸ் என்ற கடை நடத்திவருகிறாரா என்றால் சரிதான். மேற்படி தொழில் நடத்திவருவது மேற்கண்ட கட்டிடத்தில் 2வது மாடி ஆகும். மேற்படி கட்டிடத்தில் முதல் மாடியில் நான் பைனான்ஸ் நிறுவனம் நடத்தி வந்தேன் என்றால் சரிதான்.

2. நானும், பிரதிவாதியும் உறவினர்கள் அல்ல மேலும் வெவ்வெறு ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். ஒரே கட்டிடத்தில் தொழில் செய்த முறையில் எனக்கும், பிரதிவாதிக்கும் பழக்கம் ஏற்பட்டது என்றால் சரிதான். என் தாயார் 2014ம் வருடம் இறந்துவிட்டார். என்னுடைய தாயாரின் இறப்பிற்க்கு பிரதிவாதி என் வீட்டிற்க்கு வந்தார் என்றால் சரிதான். ஆனால் பலமுறை என் வீட்டிற்க்கு வந்துள்ளார்.

3. நானும், பிரதிவாதியும் குடும்ப நண்பர்கள் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய பைனான்ஸ் நிறுவனத்தில் பிரதிவாதி சிறு,சிறு தொகை வாங்கி மீண்டும் கட்டியுள்ளார் என்றால் சரிதான். இந்த பைனான்ஸ் நிறுவனம் கூட்டாண்மை நிறுவனமாகதான் மேற்கண்ட விலாசத்தில் நடைபெற்று வந்தது என்றால் சரிதான். இந்த பிரதிவாதியும், 3ம் நபர்களும் மேற்கண்ட பைனான்ஸ் நிறுவனத்தில் பெற்ற கடன்களுக்கான தினசரி பதிவேடு மற்றும் பேரேடு பராமரிக்கப்பட்டு வந்ததா என்றால் இல்லை.

4. பிரதிவாதி என்னிடம் கடன்கள் வாங்கியபோது ஆவணங்கள் எதுவும் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் சின்ன தொகையாக பிரதிவாதி கடன் வாங்கும்போது ஆவணங்கள் எதுவும் கொடுக்கமாட்டார், பெரிய தொகையாக கடன் வாங்கும்போது பிரதிவாதி காசோலை கொடுப்பார்.

5. இந்த கடனுக்கு முன்பு பிரதிவாதி என்னிடம் எத்தனை முறை காசோலைகள் கொடுத்து கடன் பெற்றுயிருக்கிறார் அந்த காசோலைகள் வசூலுக்காக சமர்பிக்கப்பட்டு வசூல் ஆகியுள்ளதா என்றால் பிரதிவாதி பணமாக கொடுத்து காசோலையை திரும்பி வாங்கிகொள்வார். மேற்படி பிரதிவாதி பணமாக கொடுத்து காசோலை திருப்பி வாங்கிகொள்வதற்க்கு கணக்குகள் எதுவும் பராமரிக்கப்பட்டு வந்ததா என்றால் ஒரு வாரம், 10 நாட்களுக்கு கணக்குகள் பராமரிப்பது இல்லை.
6. வருமான வரி செலுத்தும் நபரா என்றால் சரிதான். இந்த தாவா கடன் வருமானவரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் காட்டவில்லை. வருமானவரி கணக்குகள் காட்டும்போது என்னுடைய வருவாய், எனக்கு வரவேண்டிய தொகைகள், நான் செலுத்தவேண்டிய தொகைகள் ஆகியவற்றை குறிப்பிடவேண்டும் என்றால் சரிதான்.
7. 04.06.2023ல் பிரதிவாதக்கு கடனாக கொடுத்ததாக கூறுவதற்க்கு தாவா காசோலையை தவிர வேறு எந்த ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். தாவா கடன் தொகை ரூ.4,00,000/-த்தை வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தேனா என்றால் மொத்தமாக எடுக்கவில்லை கொஞ்சம், கொஞ்சமாக எடுத்து வைத்திருந்தேன். மேற்படி கடன் தொகையான ரூ.4,00,000/-த்தை தனக்கு தேவைப்படுவதாக 04.06.2023க்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பு கேட்டியிருந்தார் என்றால் 4 முதல் 7 நாட்கள் கேட்டிருந்தார்.
8. 4 முதல் 7 நாட்கள் வங்கியில் இருந்து ரூ.4,00,000/-த்தை எடுத்ததற்கான வங்கி கணக்குகள் ஆவணங்களாக தாக்கல் செய்ய இயலுமா என்றால் தாக்கல் செய்ய இயலும். மேலும் என் கையில் ரொக்கமாக தொகை இருந்தது. 2016 வருடம் ஏப்ரல் மாதம் ரூ.50,000/- பிரதிவாதி கடன் பெற்று இருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி கடனை ஒரு மாதத்தில் திருப்பி செலுத்த முடியாமல் 3 மாதத்தில் பிரதிவாதி திருப்பி செலுத்தினார் என்றால் சரியல்ல.
9. மேற்கண்ட தொகையான ரூ.50,000/-க்கு 36 சதவீதம் வட்டி கேட்டேன் என்றால் சரியல்ல. அதனால் மனம் வருத்தம் ஏற்பட்டது என்றால் சரிதான். எந்த வருடத்தில் இருந்து மனம் வருத்தம் ஏற்பட்டது என்றால் பணம் தாமதாக வரும்போதெல்லாம் மனம் வருத்தம் ஏற்படும். ஒரே கட்டிடத்தில் நானும், பிரதிவாதியும் தொழில் செய்து வந்ததால் தாங்கள் இருவரும் அவசரமாக வெளியில் சென்றுவிட்டு வரும்போது ஒருவர் கடையை மற்றொருவர்

பார்த்துக்கொள்வீர் என்றால் இல்லை. பிரதிவாதி தன்னுடைய கடையை பூட்டி சாவி எடுத்து சென்றுவிடுவார்.

10. பிரதிவாதி பெற்றிருந்த கடன் ரூ.50,000/–க்கு வட்டி கொடுக்கமாட்டேன் என்று கூறியதால் எனக்கும், பிரதிவாதிக்கும் ஏற்பட்ட விரோதத்தால் பிரதிவாதி கடையில் வைத்திருந்த இரண்டு காசோலைகள் முறையே 1. 107479 மற்றும் 2. 107480 ஆகிய இரண்டு காசோலைகளை நான் எடுத்து சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி இருகாசோகைளும் தொலைந்துவிட்டது என்று கருதி பிரதிவாதி தன்னுடைய வங்கியில் Stop Payment கடிதம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

11. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.1 காசோலை என்னிடம் கடனாக ரூ.4,00,000/–த்திற்கக்கு பெற்றுக்கொண்டு கொடுத்த காசசோலை இல்லை என்றால் சரியல்ல. தொகையை வாங்கி கொண்டுதான் காசோலை கொடுத்தார். இந்த வா.சா.1 காசோலை வசூலுக்க வாங்கியில் தாக்கல் செய்தார் வங்கி பணம் செலுத்த வேண்டாம் என்று 27.09.2018 அன்று கடிதம் கொடுத்துயிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. இந்த வா.சா.1 காசோலை வசூலுக்கு போடப்பட்டு என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் Stop Payment போடப்பட்டதால் வா.சா.1 காசேலை வசூலுக்கு சமர்பிக்கப்பட்டு திருப்பபட்டது.

12. இந்த வா.சா.1 காசோலையை வசூலுக்காக பிரதிவாதி வங்கியில் தாக்கல் செய்தபோது பிரதிவாதி வங்கி கணக்கில் ரூ.4,00,000/– இருந்ததா என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறத.